# Sri Lankan Independence Day; Black Day for Tamils






The Freedom Hunters For Tamils in their attempt to enlighten the international community about the atrocities committed by the security forces of Sri Lanka staged a vigil in front of the reputable supermarkets and other local outlets in the UK and in the Europe on Independence Day in protest against the government.

Please see the following link for further information and photographs;

https://docs.google.com/document/d/1F8EOZK3LHCL1YMnnDZz9eCIkgPGpnD6GtwxfiP8PxDo/edit

---

# [illegible]



பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை வழிப் போராட்டம் நடைபெற்றுவரும் நிலையில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் நாளைவரை ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்த வழங்கிய தடை உத்தரவை நீதிமன்றம் நீக்கியுள்ளது.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஒருமுக விளக்கத்தில் வழங்கிய கட்டளையை பிரதிவாதிகள் முன்வைத்த ஆட்சேபனையை அடுத்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் நீக்கியது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை தடை உத்தரவு வழங்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சட்டத்தரணி க.சுகாஷ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வேலன் சுவாமிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரநிதிகள் உள்ளிட்டோருக்கு இந்தத் தடையுத்தரவு வழங்கப்பட்டது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கொவிட்-19 சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

அத்துடன், ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டுக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் எடுத்துரைத்தனர்.

இதனடிப்படையில் பிரதிவாதிகள் முன்னிலையாகாத நிலையில் தடை உத்தரவை நீதிமன்றம் வழங்கியது. இதையடுத்து, இன்று இந்தத் தடை உத்தரவு வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தன. சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், வி.திருக்குமரன் உள்ளிட்டோர் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையை முன்வைத்தனர்.

இதனால், ஒருமுகக் கட்டளையாக வழங்கப்பட்ட தடை உத்தரவை நீக்கிய நீதிமன்றம் கொவிட்-19 நோய்த்தொற்று, சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டால் அதன் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை

எடுக்குமாறு பொலிஸாரை அறிவுறுத்தியுள்ளது.

---

# ?????????????-???????????? ?????? ????????????????? ??????????? ??????!



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் பேரணி முல்லைத்தீவில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி நகர்கின்றது.

அம்பாறை, பொத்துவிலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வலியுறுத்தும் குறித்த பேரணி, இன்று மூன்றாவது நாளில் திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்தது.

இந்நிலையில், இடையில் சிறு தாக்குதலுக்கும் உள்ளான பேரணி முல்லைத் தீவைச் சென்றடைந்து பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவிடத்துக்குச் சென்றது.

அங்கு இறுதிப் போரில் உயிரிழந்த மக்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்பின்னர், அங்கிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள பேரணி புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கிளிநொச்சி ஊடாக வவுனியா நோக்கிய பயணத்தை மேற்கொண்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக அமைப்புகள், தமிழ் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து இந்தப் பேரணியை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில், பேரெழுச்சிப் பேரணியானது கிளிநொச்சி, வவுனியா சென்று மன்னார் ஊடாக நாளை மறுதினம்

ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொலிகண்டியில் நிறைவடையவுள்ளது.

---

# ?????????????? – ????????????? ?????? ???????????????????? ?????????????? ??????????



## ????? ?????????????!



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் பேரணி முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை அடைந்துள்ளது.

அங்கு இறுதிப் போரில் உயிரிழந்த மக்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

பொத்துவிலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட தமிழர்களின் உரிமை கோரிய பேரணி, நீதிமன்றத் தடை, பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினரின் பல தடைகளையும் தாண்டி தற்போது முல்லைத்தீவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில் முல்லைத்தீவு நகரத்தில் பயணித்து, மாவட்டச் செயலகம் வரை சென்ற பேரணி, அங்கிருந்து முள்ளிவாய்க்கால் நினைவிடம் வரை வாகனக் பேரணியாகச் சென்றடைந்துள்ளது.

அத்துடன், போரில் உயிரிழந்தோர் நினைவுகூரப்பட்டு அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து அங்கு மதிய போசனம் இடம்பெறுகிறது.




உரிமைக்காய் குரல்கொடுப்போம்
ஓரணியாய் அணிசேர்வோம்
மாபெரும் கவனயீர்ப்பு பேரணி
தமிழர் தாயகத்தில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு எதிராக
பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை.
- வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் -
உரிமைக்காய் குரல்கொடுப்போம்
ஓரணியாய் அணிசேர்வோம்
மாபெரும் கவனயீர்ப்பு பேரணி
தமிழர் தாயகத்தில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு எதிராக
பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை.
- வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் -

